உருவாக்கியிருக்கிறது. ஆனால் கடந்த இரண்டாண்டுக் காலத்தில் மத்திய அரசு அடிக்கடி ஹரிஜன மாணவர்களுக்கு என்று தனியாகப் பள்ளிக்கூடங்கள் இருக்கக்கூடாது என்று வற்புறுத்தி வருகிறார்கள். அதற்காகத்தான் அது தாமதப்பட்டுக் கொண்டு வருகிறது.

அரிசனக் குழந்தைகளுக்கு மதிய உணவு

*339 வினா—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி மாவட்டம், கயத்தார் பஞ்சாயத்து யூனியன், பரசுராமபுரம் ஆரம்பப்பள்ளியில் 90 சதவிகிதத்துக்கு மேல் படிக்கும் அரிசனக் குழந்தைகளுக்கு அரிசன நல இலாகா மூலம் மதிய உணவு வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து : (அ) ஆம்.

(இ) எழுபது சதவிதத்திற்கு மேல் அரிசனப் பிள்ளைகள் படிக்கும் அரிசன நலம் அல்லாத 302 பள்ளிக்கூடங்களில் அரிசன நல நிதியிலிருந்து மதிய உணவு வழங்குவதற்கு என ஒரு செயற்குறிப்பை அரிசன நல இயக்குநர் அரசுக்கு அனுப்பியுள்ளார். இத்திட்டத்தில் பரசுராமபுரம் ஆரம்பப்பள்ளிக்கூடமும் சேர்ந்துள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. சோ. அழகர்சாமி : இந்தப் பள்ளிக்கூடத்தைப் பொறுத்த வரையில் 100-க்கு 100 ஹரிஜனக் குழந்தைகள்தான், வேறு ஜாதிக் குழந்தைகள் அந்தப் பள்ளிக் கூடத்தில் கிடையாது. 70 சதவிகிதத்திற்கு மேல் ஹரிஜனப் பிள்ளைகள் படிக்கும் பள்ளிகளில் உள்ள மாணவர்களுக்கு மதிய உணவு அளிக்கும்போது நூற்றுக்கு நூறு ஹரிஜனப் பிள்ளைகளே படிக்கக்கூடிய இந்தப் பள்ளியில் உள்ள பிள்ளைகளுக்கு மதிய உணவு வழங்குவதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளுமா ?

1974 மார்ச் 9]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இந்தக் கேள்வி பரிசீலனை செய்யப்பட்டிருக்கிறது. ஆண்டு ஒன்றுக்கு எட்டு லட்சம் ரூபாய்க்கு அதிகமாகத் தேவைப்படுகிறது. எனவே, நிதிப் பற்றுக்குறை காரணமாக இது ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

திரு. முனு ஆதி: ஹரிஜன மாணவர்களுக்கு மதிய உணவு வழங்குவதில் யூனியன் பள்ளிகளில் எப்படி சென்ட்ரல் கிச்சன் ஸ்கீம் என்று வைத்திருக்கிறோமோ அப்படி ஒரு புதிய திட்டத்தை உருவாக்கி அந்த மாணவர்களுக்கு மதிய உணவு விநியோகம் செய்யும் எண்ணம் அரசுக்கு உண்டா? மதிய உணவு விஷயத்தில் அதைத் தனியார் கையில் ஒப்படைப்பதால் பல புகார்கள். முறையாகப் போடுவதில்லை என்று ஹரிஜன மாணவர்கள் புகார் செய்வதற்குக் கூட தெரியாத நிலையில் அவர்கள் யாரிடமும் முறையிடுவதில்லை. ஆகவே, இப்படிப்பட்ட புதிய திட்டத்தை உருவாக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: சென்ட்ரல் கிச்சன் மூலம் சமையல் செய்து கொடுக்கவேண்டுமென்ற எண்ணம் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. தி. ஓ. பெரியசாமி: திருநெல்வேலி மாவட்டத்தில் கயத்தாறு பஞ்சாயத்து யூனியனில் உள்ள பரசுராமபுரம் ஆரம்பப் பள்ளியில் 90 சதவிகிதத்திற்கு மேல் ஹரிஜன மாணவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு மதிய உணவு வழங்கப்படுமா என்பது கேள்வி. அங்குள்ள 10 சதவிகிதம் ஹரிஜன மாணவர்கள் அல்லாத மாணவர்களுக்கும் இந்த மதிய உணவு வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: 70 சதவிகிதத்திற்கு மேல் இருக்கிற ஹரிஜன மாணவ மாணவிகள் படிக்கிற பள்ளிகளில் எல்லாம் இந்த மதிய உணவு கொடுக்கவேண்டுமா என்பது பரிசீலனையில் இருக்கிறது. நலத் துறையால் நடத்தப்படுகிற பள்ளிகளில் ஹரிஜனங்கள் அல்லாத மாணவர்களுக்கும் சேர்த்துத் தான் இப்போதும் மதிய உணவு கொடுக்கப்பட்டு வருகிறது.